**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு**

**இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**

# சிலாபம் மீன்பிடி துறைமுகத்தில் உள்ள எல்லை வேலி மற்றும் பொது மலசலகூடத்தின் முன்மொழியப்பட்ட புதுப்பித்தல் வேலைகள்

**கோப்பு இலக்கம்: CFHC/PD/BFPTCH/2026-64**

1. மேற்கூறிய வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் அழைக்கப்படுகின்றன. இந்த வேலைகளில் தகர்த்தல் வேலைகள், அகற்றும் வேலைகள், கொன்கிறீட் வேலைகள், கற்கள் மற்றும் செங்கல் வேலைகள், நிரப்பும் வேலைகள், ஓடு பதிக்கும் வேலைகள், அலுமினியக் கதவுகள் மற்றும் ஜன்னல்களை மீண்டும் பொருத்துதல் மற்றும் வர்ணம் பூசும் வேலைகள் போன்றவை அடங்கும். எதிர்பாராத செலவுகள் மற்றும் பெறுமதிசேர் வரி (VAT) இல்லாமல், பொறியியலாளரின் சுமாரான மதிப்பீட்டுச் செலவு 10.75 மில்லியன் ரூபாவாகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் மேற்கொள்ளப்படும்.
3. விலைமனுதாரர்கள் பின்வரும் தகுதி அளவுகோள்களுக்கு இணங்க வேண்டும்.
    - விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலப்படுத்தப்படாதவராக இருக்க வேண்டும்.
    - விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் கட்டிட நிர்மாணத் துறையில் C7, C6 மற்றும் C5 தரங்களில் CIDA நிறுவனத்தின் பதிவைப் பெற்றிருக்க வேண்டும்.
4. விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை அளவுகோள்களுக்கு இணங்க வேண்டும்.
    - கடந்த ஐந்து (05) வருடங்களில் (2019,2020,2023,2024,2025) மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் வருடாந்த சராசரி புரள்வு குறைந்தபட்சம் 10.75 மில்லியன் இலங்கை ரூபாவாக இருக்க வேண்டும்.
    - கடந்த பத்து (10) வருடங்களில், குறைந்தபட்சம் 7.5 மில்லியன் இலங்கை ரூபா திட்ட மதிப்புடன், இதே போன்ற தன்மை மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தை (இந்த தேவைப்பாட்டிற்கு இணங்குவதற்கு, கூறப்பட்ட வேலை 70% பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்) பிரதான ஒப்பந்தக்காரராக நிர்மாணித்த அனுபவம்.
    - திட்ட நிறைவுத் திகதி வரை, ஒப்பந்தத்தின் கீழ் செய்யப்படக்கூடிய எந்தவொரு முன்பணத்தையும் தவிர்த்து, மற்ற ஒப்பந்தக் கடமைகளை நீக்கிய பின்னர், குறைந்தபட்ச திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகளின் அளவு 10.75 மில்லியன் இலங்கை ரூபாவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
    - விலைமனுதாரர் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் நிறுவன பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழை (PCA 3) பெற்றிருக்க வேண்டும். இது ஒப்பந்தம் கையளிக்கப்படுவதற்கான ஒரு தகைமையாகும்.
5. இந்த விலைக்கோரலுக்கான நிர்மாணக் காலம் 90 நாட்காட்டி நாட்களாகும் என்பதுடன் திட்ட அமைவிடம் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் மீன்பிடி துறைமுகத்தில் உள்ளது.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு - 15, இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், சிவில் பொறியியல் பிரிவு, பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல்) அவர்களிடமிருந்து 011-2529391 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கொழும்பு 15, இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் பெறுகை ஆவணங்களை (இலவசமாகப்) பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2026-07-21ஆம் திகதி முதல் 2026-08-11ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 3500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு 15, இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், பெறுகை முகாமையாளருக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்துபூர்வமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களில் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
8. விலைமனுக்கள் 2026-10-27ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும். (77 நாட்கள்)
9. சகல விலைமனுக்களுடனும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 105 நாட்கள் வரையில் (2026-11-24) செல்லுபடியாகும் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் (ரூபா 160,000.00) ரூபாவிற்கான (வங்கி உத்தரவாதம் அல்லது ரொக்கப் பண வைப்பு) விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ரொக்கப் பண வைப்பின் பற்றுச்சீட்டின் பிரதியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்).
10. நகல் பிரதிகளுடனான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் “தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு, இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு - 15” எனும் முகவரிக்கு 2026-08-11ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். (விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்)
11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கொழும்பு - 15, இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில் 2026-07-31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.
12. சகல விலைமனுதாரர்களும் 2007 ஜனவரியின் ICTAD/SBD/01 இரண்டாம் பதிப்பை கவனமாக வாசிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (Succeeding ICTAD/SBD/01)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு - 15.**